**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.757/2024 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | பச்சையப்பன் |
| த/பெ. | ஆறுமுகம் |
| வயது | 59 |
| வசிப்பிடம் | எண்.1/125, வெல்லிஸ்வரன் கோவில் தெரு, மெய்யூர் கிராம், சட்ராஸ் அஞ்சல், திருக்கழுக்குன்றம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம். |
| தொழில் | விவசாயம் |

**முதல் விசாரணை 20.07.2026**

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், சட்ராஸ் அஞ்சல், மெய்யூர் கிராம், வெல்லிஸ்வரன் கோவில் தெரு, எண்.1/125-ல் வசிக்கும் பச்சையப்பன் த/பெ.ஆறுமுகம், வயது 59 ஆகிய நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1. 09.12.2013 தேதியிட்ட அடமான பத்திரம் ஆவண எண்.7340/2013 அசல் வா.சா.ஆ.1.
2. 31.10.2023 தேதியிட்ட வாதியின் வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் வா.சா.ஆ.2.
3. 01.11.2023 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்று கொண்டதற்கான Tracking Report அசல் வா.சா.ஆ.3.
4. 14.12.2023 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.4.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

(பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை 21.08.2026க்கு ஒத்தி வைக்கப்படுகிறது)